செ. கு. எண்: 113

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 7.5.2013

திருவண்ணாமலை மாவட்டம், அத்தியந்தல் கிராமம் அருகே 2.5.2013 அன்று ஹரியானா மாநிலத்திலிருந்து பெங்களூரு வழியாக கடலூர் சென்று கொண்டிருந்த இரண்டு சக்கர வாகனங்களை ஏற்றிச் சென்ற கன்டெய்னர் லாரி மீது எரியூட்டப்பட்ட பெட்ரோல் நிரப்பிய புட்டிகளை சில சமூக விரோதிகள் எறிந்துள்ளதையடுத்து, ராஜஸ்தான் மாநிலம், பரத்பூர் மாவட்டம், மிட்டபுரா, கார்காடி பகுதியைச் சேர்ந்த லாரி ஓட்டுநர் திரு. சக்கர் என்பவர் பலத்த தீக்காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இன்று (7.5.2013) உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் சொல்லொணாத் துயரமும், மன வேதனையும் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த சக்கர் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கொடூர தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கும்படி நான் காவல் துறையினருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த சக்கர் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**